**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

| நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION) |
|---|

**ஜனவரி–பிப்ரவரி 2023**
**C011 இருபதாம் நூற்றாண்டு கவிஞர் இருவர்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. புண்ணியம் கோடி என்று பாரதியார் எதைச் சுட்டுகிறார்?
2. கொடியின் மூலம் பாரதி உணர்த்துவன யாவை?
3. பாரதியின் சமயம் எத்தகையது?
4. காந்தியடிகளாரின் பெருமையைப் பாரதி எவ்வாறு வெளியிடுகிறார்?
5. பாரதமாதா மீது பாரதியார் பாடிய மூன்று பிரபந்தங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
6. எட்டுத்திக்கும் செல்வது எதற்காக?
7. பண்டைய தமிழ் மன்னர்களின் வீரம் எந்த பாடல்களில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது?
8. பாரதியிடம் பெண்ணுரிமைச் சிந்தனைகள் எழக் காரணமாக இருந்தவர் யார்?
9. கடவுளைப் பாடும் நிலையிலிருந்து பாரதிதாசன் எந்த ஆண்டில் மாறினார்?
10. முதுகில் புண்பட்ட கணவனின் உடல் கண்டு கதிர்நாட்டு அரசன் மனைவி என்ன கூறுகின்றாள்?
11. மதுரையை யார் எரித்ததாகப் புரட்சிக்கவிஞர் கூறுகின்றார்?
12. தமிழ் வளர்ச்சிக்குத் தடையாகப் பாரதிதாசன் எதை உணர்த்துகிறார்?
13. சுயமரியாதை என்றால் என்ன?
14. தமிழ் எப்போது தோன்றியது என்று பாரதிதாசன் பாடியுள்ளார்?
15. நாடகங்கள் எவற்றால் சிறப்பைப் பெறும்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பாரதியார் தாம் இளமையில் அனுபவித்த தனிமைத் துயரினைப் பற்றி எங்ஙனம் பாடியுள்ளார்?
2. குயிலின் முற்பிறவியில் நிகழ்ந்தது யாது?
3. இந்தியாவை வாழ்விக்க வந்த மகாத்மா என்று காந்தியைப் பாரதி பாராட்ட காரணம் என்ன?
4. பாரதியின் கவிதைகளைப் பற்றி எழுதுக.
5. பொறுப்பில்லாப் பெண்ணின் செயல்களைப் பாரதிதாசன் இருண்ட வீட்டில் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
6. இரண்டு மூலிகைகளின் அற்புதங்களாகப் பாரதிதாசன் தெரிவித்திருப்பன யாவை?
7. பாரதிதாசன் காலத்தில் நிலவிய மூடநம்பிக்கைகள் குறித்து எழுதுக.
8. மாமனாரின் கடமை உணர்வை பாரதிதாசன் எவ்வாறு குடும்ப விளக்கில் குறிப்பிடுகிறார்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பாரதியின் சித்தாந்தக் கோட்பாடுகள் குயில் பாட்டில் உள்ளுறைப் பொருளாக அமைந்திருப்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் பொது நலப்பார்வையின் தீவிரத்தை அடையாளப்படுத்துக.

2. (அ) தமிழ் மொழி சிறக்க, தமிழர் பெருமை தரணியில் பரவ, பாரதியார் காட்டும் வழிமுறைகளின் தேவையினை ஆய்ந்துரைக்க.

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் கவிதைகளில் காணும் உணர்ச்சி வேகம், சொல்லாட்சி, வருணனைச் சிறப்பு ஆகியவற்றை விளக்குக.

3. (அ) தமிழ்க் கவிதை வரலாற்றில் பாரதி ஒரு திருப்புமுனையாக அமைந்ததை விளக்குக.

(அல்லது)

(ஆ) இயற்கை வருணனையிலும் பாரதிதாசனின் சமூகச் சிந்தனைகள் மிளிர்வதை எடுத்துரைக்க

***